காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

25-9-66

விலை 20 காசு

ஒரு கற்பனை உரையாடல்:

முதல் சந்திப்பு!

[அண்மையில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பீகார் மாநிலத்திலுள்ள புசா என்ற நகரில் பூமிதான இயக்கத் தலைவர் விநோபாபாவேயை முதன் முதலாகச் சந்தித்துப் பேசினார் என்று செய்தி வந்ததல்லவா.....அந்தச் சந்திப்பு எப்படி இருந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் பிறந்ததுதான் இது....]

ஆசார்ய விநோபாபாவே, சோர்ந்துபோன நிலையில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்த நிலையில் அன்றைய செய்தி இதழைப் படித்துக்கொண்டிருக்கிறார். அப்போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, 'ஜெய்ஹிந்த்!' என்று கை கூப்பி வணங்கிக்கொண்டே அங்கு வருகிறார்.

குரல்கேட்ட விநோபா திரும்பிப் பார்த்து 'நமஸ்தே! வருக! வருக! அமருங்கள்' என்கிறார்.

பிரதமர் எதிரேயுள்ள ஒரு நாற்காலியில் அமர்கிறார்.

விநோபா:- வெகு நாளைக்குப் பிறகு இப்போதுதான் நேரம் கிடைத்தது என்று நினைக்கிறேன்!

பிரதமர்:- அப்படியொன்றுமில்லை! பிரதமர் ஆனது முதலே நான் தங்களைச் சந்திக்கத் தவியாய்த் தவித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நேரம்தான்......

வி:- ஆமாம்! பற்பல காரணங்களுக்காக அயல் நாடுகளிலேயே அதிகச் சுற்றுப்பயணம்! அயல் நாடுகளைப்பற்றியே அதிகச் சிந்தனை! அப்பாவைப்போல!

பி:- என்ன செய்வது! இந்திய விவகாரங்கள்தான் என் மூளையைக் குழப்புகின்றன என்றால், இந்தியா தொடர்பு கொண்டுள்ள வெளிநாடுகளும் என்னைத் திணறடித்துத் திககுமுக்காடச் செய்துகொண்டே இருக்கின்றன.

வி:- பின்னே! 1967ல் பொதுத் தேர்தல் வேறு வருகிறது; கட்சிக்குள்ளே ஏகப்பட்ட பூசல்! போராட்டம்! இந்த சம்பவங்கள் எல்லாமே உங்களது பிரதமர் பதவிக்கு விடுக்கப்பட்ட அறைகூவல்கள் போலல்லவா இருக்கின்றன? நல்லறிஞர் பலரது யோசனைகளை நாடவேண்டிய நிலைமை! த்சோ! த்சோ!!

பி:- இதற்காகத்தான் தங்களைச் சந்திக்க வேண்டுமென்று......

வி:- நான் இந்த நாட்டு மக்களையும், அவர்களது விவகாரங்கள் பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். உலக விவகாரங்களில் கவனம் செலுத்தி ஈடுபாடுகொள்ளுவதினின்றும் விடுதலை பெற முயலகிறேன்; அதனாலேயே யாருக்கும் கடிதம்கூட எழுதுவதில்லை!

பி:- சரிதான், சரிதான்! அதனால்தான் நான் தங்களைச் சந்திக்க வரலாமென ஊழியர் மூலம் சொல்லியனுப்பி இருந்தீர்களா?

வி:- உண்மை! உங்களுக்குக் கடிதம் எழுதி, விட்டுவிட்ட பழக்கத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டால், உலகப்பற்று மீண்டும் பற்றிக்கொண்டால்...?

பி:- வெளி உலகத்தைப் பார்த்து நீங்கள் அதிகமாய்ப் பயப்படுகிறீர்களோ......

வி:- பயப்படாமல் என்ன செய்வது? வெளி உலகம் ஒருபுறமிருந்தாலும், அரசியல் நடப்புகளும், நிகழ்வுகளும் என்னைப் பெரிதும் கலங்கச் செய்கின்றனவே! உதாரணத்திற்கு ஒன்று எடுத்துக் கொள்ளுங்கள்....நீங்கள் அண்மையில் ரூபாய் மதிப்பைக் குறைத்தீர்கள். இதற்குக் காரணம், அமெரிக்கத் தலையீடு; அமெரிக்காவின் கட்டளை என்றுகூட மக்களவையில் டி. டி. கே. வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார். வெளிநாட்டுத் தலையீடு உண்டா இல்லையா? என்பதற்கு நான் கருத்தறிவிக்கத் தொடங்கியிருந்தால், நிலைமை என்ன ஆகி இருக்கும்? இப்போதாவது வெளியாரின் முழு உதவியும் கிடைக்கின்றனவா?

பி:- நாணய மதிப்புக் குறைப்பில் என் தலையீடு எதுவும் இல்லை என்பதை நான் உங்களுக்கு நம்பிக்கை பிறக்கும்படி எப்படிச் சொல்ல முடியும்? எல்லாம் அந்த நிதியமைச்சராலும், உணவு அமைச்சராலும், திட்ட அமைச்சராலும் வந்த வினை! அதன் விளைவுகளை இப்போது நான் அனுபவித்துத் தீரவேண்டியிருக்கிறது!

வி:- அனுதாபப்படுகிறேன் உங்கள் நிலைமைக்கு! இதுபோன்ற விஷயங்களில் உங்கள் யோசனைப்படியே செயல்பட்டிருக்கவேண்டும்!

பி:- செயல்பட்டிருக்கத்தான் வேண்டும்; ஆனால் அமெரிக்க உதவி அடியோடு கிடைக்காது என்று பக்கத்துக்குப் பக்கம் உட்கார்ந்துகொண்டு தலைவலி எடுக்கும் அளவுக்கு அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள்!

வி:- அவர்கள் கூறினார்கள்; நீங்கள் ஒப்புக்கொண்டீர்கள்! அப்படித்தானே!

பி:- ஆமாம்!

வி:- பிறர் கூறுவதையெல்லாம் ஒப்புக்கொள்ளும் பழக்கம்தான் உங்களுக்கில்லையே?

பி:- என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்!

வி:- அப்படியானால் பிறர் சொல்லுவதைத்தான் நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்களா? சுயமாக எதுவும் செய்வதில்லையா? செய்ய முடியவில்லையா? உங்கள் அவைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தபோது, முதலில் தீர்மானததை வாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டபோது, அப்படியே செய்ய ஒப்புக்கொண்டிருக்கவேண்டும்! மறுத்துவிட்டீர்களே!!

பி:- மூன்றாம்நாள் மசோதாவாதத்தைத் தள்ளிவைத்துவிட்டு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை வாதத்திற்கு எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டேனே!

வி:- அங்குதான் தவறு செய்துவிட்டீர்கள். வேண்டுகோள் வந்தபோதே அப்படிச் செய்திருக்க வேண்டும்! செய்திருந்தால் வீணாக ஒருகுழப்பத்தைதவிர்த்திருக்கலாம் பார்லமெண்டரி முறைக்கே களங்கம் என்று கருதத்தக்க நிலைமையை அகற்றி இருக்கமுடியும்...குழப்பங்களுக்குப்பின், பலரது வெளியேற்றததுக்குப்பின், நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கக் கூடாது; பிடிவாதத்தையே செயல்படுத்தி இருக்கவேண்டும். கலவரத்துக்குப் பின் ஒப்புக்கொண்டதானது, எந்த வொன்றுக்

(15-ம் பக்கம் பார்க்க)

> **மன்னன்**
>
> நல்லதைச் செய்துவிட்டு; அதனால் விளையும் பொல்லாப்பைப் பெருமையுடன் ஏற்றுக்கொள்பவனே மனிதருள் மன்னன்.
>
> — **ஆண்டிஸ்தனிஸ்.**

காஞ்சி

மலர் 3 25—9—66 இதழ் 9

வரவேற்கிறோம்.

ஐ. நா. அமைப்பு மூலம் நாடுகளுக்கிடையே **கிளம்பிடும் கருத்து வேற்றுமைகள்,** பெரும் போராக வடிவமெடுதது உலகை அழித்திடாது தடுத்திட முடியும் என்ற நம்பிக்கையுடன், பேரதிகாரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணியாற்றிவரும் **யூதாண்டு,** மனம் உடைந்த நிலையினராகி, நோக்கம் ஈடேறவில்லை, முயற்சி பலிக்கவில்லை. ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை, எனவே மேற்கொண்டு பொறுப்பிலே இருந்திட மனம் இல்லை, விலகிக் கொள்கிறேன், வேறு ஒருவரை அமர்த்திக் கொள்ளுங்கள் என்று கூறிக் குமுறுகிறார்.

நல்ல ஆரூடம் கணிக்கப்பட்டு, மிகப் பெரிய அளவுக்கு நம்பிக்கையைக் கிளறிவிடத்தக்க சூழ்நிலையுடனும், பல்லோரின் வாழ்த்துக்களுடனும் துவக்கி நடத்தப்பட்டு வந்த சர்வதேசச் சங்கத்தைப்போல, ஐ. நா.வும் உருக்குலைந்து போய்விடும் நிலை ஏற்படவில்லை என்றாலும், நாடுகளுக்கிடையே மூண்டுவிடும் போர்களைத் தடுத்திடவோ, பெரிய நாடுகள் சிறிய நாடுகளை மிரட்டியோ மயக்கியோ பணியவைத்திடும் போக்கை மாற்றிடவோ, ஐ. நா. வினால் முடியவில்லை.

வல்லரசுகள், ஐ. நா. வைத் தமது ராஜதந்திரக் களங்களிலே ஒன்றாகவே கருதி நடந்து வருகின்றன. மனிதகுல மாண்பினை நிலைநாட்டுவதற்கான தூய்மையான அமைப்பு என்று கருதி ஒழுகுவதாகத் தெரியவில்லை. ஐ. நா. வில் சமாதானம் பற்றியும் அதன் பலனாக ஏற்படக்கூடிய சுபிட்சம் பற்றியும், படைக் குறைப்புப் பற்றியும் அதன் மூலம் பயத்தைப் போக்கிட இயலும் என்பது பற்றியும், போரில் குதித்திடாமலே, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்—வேண்டும்—என்பது பற்றியும் உருக்கமான உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே, வல்லரசுகள் மூட்டிவிடும் போர் காரணமாகப் பீரங்கிகள் அலறுகின்றன, விமானங்கள் குண்டுகளைப் பொழிகின்றன; இரத்தம் கொட்டப்படுகிறது, அழிவுக் கூத்தாடுகிறது. இந்நிலை கண்டு உள்ளம் நொந்து யூதாண்டு பேசி இருக்கிறார்; அவர் நெஞ்சத்தின்மீது பெரியதோர் விசாரச் சுமை அழுத்திக் கொண்டிருக்கிறது.

"அம்மா! நான் மிகவும் களைத்துப் போயுள்ளேன்!" என்று அவர் தன் தாயாருக்குச் 'சேதி' அனுப்பினாராம்.

உருக்கம் நிறைந்த அந்தச் 'சேதி', யூதாண்டு தன் தாயாருக்கு மட்டுமே அனுப்பினார் என்று கருதுவதற்கில்லை; உலகினருக்கே பொதுவாக அவர் விடுத்துள்ள சேதி என்றே கருதிட வேண்டும்.

உள்ளம் வெதும்பிய நிலையினராக உள்ள யூதாண்டு வியட்நாம் போர் நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதிலும், தென்ஆப்பிரிக்க அதிபர்கள் காட்டிடும் நிறவெறி அடக்கப்பட்டாக வேண்டும் என்பதிலும், அணு ஆயுதங்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதிலும், படைக் குறைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டு, முயன்று பார்த்தார்; அவர் எதிர்பார்த்தஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

வியட்நாம் போர் விரிவடைந்துவிட்டால், அதுவே உலகப் பெரும்போராக வடிவமெடுத்து விடக்கூடும் என்று நிபுணர்கள் அஞ்சுகின்றனர்; இன்று விஞ்ஞான அறிவினை நாசகாரியத்துக்காக இணைத்து வெற்றி கண்டு, புதிய புதிய அழிவுக் கருவிகளைக் கண்டுபிடித்துக் குவித்து வைத்துக்கொண்ட நிலையில், உலகப் பெரும்போர் மூண்டிடின், விளையக்கூடிய விபரீத நாசத்தைப்பற்றி எண்ணிப்பார்த்திடுவோர் எவரும் நடுநடுங்குவர்.

எனவே யூதாண்டு போன்றோர், எங்கோ உலகின் ஒரு கோடியில் நடைபெறும் சமர், தன்னாலே அடங்கிவிடும் என்று கருதிடக்கூடாது, எந்த நேரத்திலும் உலகையே கப்பிக்கொள்ளக்கூடிய பெரும் போராக வடிவம் கொண்டுவிடும், ஆகவே, முளையிலேயே கிள்ளி எறிந்திட வேண்டும் என்று கருதுகின்றனர்; அதற்கான பணியினில் முனைந்து நிற்கின்றனர்.

ஆனால் அவர்களின் நல்லுரையை வல்லரசுகளின் தலைவர்கள் கேட்டு மதிப்பளித்திட முன்வர மறுக்கின்றனர். ஒவ்வொருவரும் தமது பக்கமே முழு நியாயம் இருப்பதாக வாதிடுகின்றனர்; தமது கருத்தை ஆதரிக்க, சிறிய நாடுகளை வளைத்துக் கொள்கின்றனர்.

இந்தியா — பாகிஸ்தான் பூசல் கூடாது என்று பேசிடும்போது சமாதானத்தூதராகக் காட்சி தந்திடும் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர், வியட்நாம் குண்டு வீச்சு, ஆசியாவை ஆபத்திலிருந்து காப்பாற்ற அமெரிக்கா மேற்கொள்ளும் 'தொண்டு' என்று கூசாது கூறுகிறார்.

உலகின் பல்வேறு தலைவர்களின் கண்டனம், அமெரிக்காவின் நட்பை மதித்திடவும், நேசக்கரத்தைப்பற்றிக்கொள்ளவும் விரும்பும் தலைவர்கள் தந்திடும் அறிவுரை, அமெரிக்காவிலேயே அறிவாளர்கள், விடுத்திடும் எச்சரிக்கை, தூய உள்ளத்தினர் தொடுத்திடும் கிளர்ச்சி இவை யாவற்றினையும், அவர், விவரம் அறியாதாரின் போக்கு என்று கருதுகிறார்; நாளாகவாக, கடுமையும் கொடுமையும் பொழிந்தபடி இருக்கிறார்; வியட்நாமின் தென்னகத்தைத் தளமாக்கிக்கொண்டு, வடபகுதியைத் தாக்குகிறார்.

ஐ. நா. அரங்கத்தில் மதிப்புமிக்க இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ள அமெரிக்கா இதுபோன்ற அக்ரமத்தைச் செய்துகொண்டிருக்கிறது; தடுத்திட முடியவில்லை; என்ன பயன், உலகநாடுகள் மன்றம் என்ற ஒரு அமைப்பை, நடத்திக்கொண்டிருப்பதால், என்ற

சலிப்புணர்ச்சி, அந்த மன்றத்துக்கு வெளியே, நெடுந் தொலைவிலே உள்ள நம் போன்றுருக்கே ஏற்படுகிறது என்றால், அங்கேயே இருந்துகொண்டு, வல்லரசுகளின் போர்வெறியையும் ஆதிக்க வெறியையும் நேரடியாகவே பார்த்துக்கொண்டிருக்கும் யூதாண்டு என்ன வேதனை அடைவார் என்பதை விளக்கத்தேவையில்லை.

வியட்நாம் பிரச்சினை, வியட்நாமியர்கள் தீர்த்துக்கொள்ளவேண்டிய ஒன்று; அமெரிக்க வெடிவிமானங்கள் மூலமாக அல்ல!

கம்யூனிஸ்டு முறையை மேற்கொள்வதா, ஜனநாயக முறையை மேற்கொள்வதா என்பதை வியட்நாமியர் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்: அமெரிக்கா தன்னை அதற்கான போதகாசிரியர் ஆக்கிக்கொள்வது அக்ரமம். இது அறிவாளர் பலருடைய கருத்து. ஆனால் இந்தக் கருத்தை மதித்திட அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் மறுக்கிறார். அதன் காரணமாக உலகத் தலைநகர்கள் ஒவ்வொன்றிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுவருகிறது. யூதாண்டு, இதற்காவது ஒரு மதிப்புக் கிடைக்கிறதா என்று காத்திருந்து பார்த்தார்; கிடைக்கவில்லை; எனவேதான் மனமுடைந்த நிலையினராகியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவில், கருப்பர் எமது காலடி கிடக்கவேண்டியவர்கள், நாங்கள் அமைத்திடும் சேரியில் கிடக்கவேண்டியவர்கள் என்ற நிறவெறி பிடித்தலையும் வெள்ளையர் அரசு நடக்கிறது.

எந்த ஆப்பிரிக்க மக்களுக்கு அந்த நாடு சொந்தமோ அதனைப் பிடித்துக்கொண்டு, அதே மக்களை, மிருகங்களை வேட்டையாடுவதுபோல ஆடுகின்றனர். உலகிலே நீதியாளர்கள் நேர்மையாளர்கள், அறமறிந்தோர் தூய்மை வேண்டுவோர், ஜனநாயக வாதிகள் மனிதகுல மாண்பினை மதித்திடுவோர் அனைவரும், இந்த நிறவெறிமீது கட்டப்பட்டிருக்கும் காட்டுமிராண்டி அரசினைக் கண்டித்துள்ளனர்; எனினும், தென்ஆப்பிரிக்க வெள்ளை அரசு உலகையே துச்சமென்று கருதி, தன் போக்கிலே முனைந்து நிற்கிறது. என்ன செய்ய முடிந்தது? பகைத்துக் கொண்டீர்களே! என்ன செய்ய முடிந்தது எம்மை என்று கேட்டு எக்காளமிடுகிறது அந்த நாடு! ஐ. நா. சபையில் கூடி, மனித உரிமைகள் பற்றிய மணிவாசகம் பேசுகின்றனர்! மனிதத் தன்மை மாய்க்கப்படுகிறது அங்கே; தடுத்திட முடியவில்லை!!

நிறவெறி அரசின் தலைவனை வேறோர் வெள்ளையன் சுட்டுக் கொன்றான், சின்னாட்களுக்கு முன்பு! ஆளை; வெறியை அல்ல!

நிறவெறியிலே, வீழ்ந்துபட்ட வெர்வோர்டு துரையைவிட அதிகத் தீவிரம் காட்டும் புதிய துரை, ஆட்சியை நடத்துகிறார். என்ன செய்ய முடிகிறது!!

இதனைக் கண்டு துணிவு பெற்ற ரொடிஷியாவின் வெள்ளை அதிபர்கள், பெருவாரியான நாட்டு மக்களை அடிமைகளாக்கி, அரசியலில் உரிமை வழங்காமல், சிறுபான்மையினரான வெள்ளையரைக் கொண்ட ஆட்சி அமைத்து. இது முறையல்ல என்று கூறிய பிரிட்டனை, நீ உன் வேலையைப் பார்! என்று கூறிவிட்டனர்! என்ன செய்ய முடிந்தது? பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், வாதங்களை அனுப்புகிறார், ரொடிஷியாவுக்கு துருப்புகளை அனுப்பித் துடுக்குத்தனத்தைஒடுக்க மனமின்றி; துணிவின்றி.

காமன்வெல்த் மாநாட்டிலே, இந்தப் போக்கு கண்டிக்கப்பட்டது!

தமது வேலை முடிந்துவிட்டது என்று காமன்வெல்த் நாட்டுத் தலைவர்கள் வீடு திரும்பிடுவது தவிர விளைந்த பலன் என்ன?

ரொடிஷிய பிரதமர் ஸ்மித் கொக்கரித்தபடி இருக்கிறார்: அடக்குவார் இல்லை.

இதுபோல், அக்ரமத்தை அடக்கிடும் ஆற்றலற்று, அவனி முழுவதிலும் சாந்தம், சமாதானம், நீதி நேர்மை மலர்ந்திடப் பாடுபடுவதே நோக்கம் என்று கூறிக்கொண்டு ஒரு பெருமன்றம் அருப்பானேன்! அதிலே நாம் இருந்து வருவானேன் என்று யூதாண்ட் நினைப்பதிலே தவறு என்ன?

மனம் உடைந்த நிலையினராகியுள்ள யூதாண்டு, தமது கருத்தினை ஒளிவு மறைவு அற்ற முறையில், வெளியிட்டிருப்பதனை வரவேற்கிறோம்.

வல்லரசுகளின் வெறித்தனத்தை அடக்கிட வேண்டிய அவசியத்தை, அந்தந்த நாட்டின் பொது மக்கள்—உழைக்கும் மக்கள் — உணர்ந்துகொண்டு வருகின்றனர். தலைவர்கள் கூடிடும் கொலு மண்டபத்தை மட்டும் இனியும் நம்பிக்கொண்டிருப்பதிலே பலன் இல்லை; அந்தந்த நாட்டிலும், உண்மையாகவே உலக சமாதானத்தில் பற்றுடனும், ஆதிக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தற்றும், நடந்து கொள்ளக் கூடிய ஆட்சி முறையை ஏற்படுத்தியாக வேண்டும் என்ற உறுதியை மக்கள் பெறுவதற்கு, யூதாண்டு வெளியிட்டுள்ள கருத்துரை மெத்தவும் பயன்படும் என்பதனால், அதனை வரவேற்கிறோம்.

யூதாண்டுவின் பெருமூச்சு, கண்டு கவலை கொண்டு நிலைமையை சீர்படுத்த வேண்டுமென்று பலர் முன்வந்திடக் காண்கிறோம்.

ஐ. நா. வில் பேசிய அமெரிக்க கோல்டுபர்க் பெருமளவு பழைய பாணியிலேயே பேசி இருக்கிறார் என்றபோதிலும், ஒரு புதிய குளிர்ச்சி அவருடைய குரலில் கலந்திருக்கிறது.

பிலிப்பைன் தலைவர் மார்கோ, ஐ. நா. அவைக்குள்ளேயே. ஒரு 'ஆசியமுனை' அமைத்து, அதன் மூலம் வியட்நாம் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுத்திடவேண்டுமென்று வலியுறுத்தி உள்ளார்.

யூதாண்டும் வியட்நாம் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடிடும் திட்டம் தந்துள்ளார்.

இவைகள் உடனடிப் பலன் தாராது போயினும், யூதாண்டு வெளியிட்ட ஏக்கம், அனைவரையும், ஐ நா. பற்றித் தீவிரமாகச் சிந்திக்கச் செய்துவிட்டிருப்பதன் மூலம், ஒரு நல்ல எதிர்காலத்தை அமைக்க உதவிடக் கூடும். நேரடியாக இல்லையெனினும் மறைமுகமாகவாகிலும் இத்தகைய நல்ல சூழ்நிலையை அமைத்திட, யூதாண்டு வெளியிட்ட கருத்து உதவுகிறது என்பதாலேயே, அதனை வரவேற்கிறோம்.

தம்பி

மரண அடி கொடுப்பாரராம்!

மரண அடி கொடுக்கப் போகிறேன் என்று பிரகடனம் செய்துவிட்டுள்ளார்
காமராஜர். எதிர்க்கட்சிகளுக்குத்தான்!

இவர் பாசம் பொழிவார், ஆதரவு அளிப்பார், என்று எதிர்க்கட்சிகள் எண்ணிக்
கொண்டிருக்க முடியும்! தாக்குவதற்குத்தான் துடித்துக்கொண்டிருப்பார், அதற்கே
திட்டமிடுவார் என்பது எல்லோருக்கும் புரியும்! இதை இவர் சொல்லித்தானா எதிர்க்
கட்சிகள தெரிந்துகொள்ள வேண்டும்! நன்றாகத் தெரியும், மிக நன்றாகத் தெரியும்,
எதிர்க்கட்சிகளை ஒழித்துக் கட்டினாலொழிய, தனது கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்ற
அச்சம் பிடித்தாட்டும் நிலையில், 'அகில இந்தியா' இருக்கிறார் என்பது. ஆகவே அவரிட
மிருந்து எதிர்க்கட்சிகள் தாககுதலைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்; தட்டிக்
கொடுப்பார் என்ற நினைப்புடனா இருக்கமுடியும்! அங்கிலையில காமராஜர் மரண அடி
கொடுப்பேன் என்று பேசியிருப்பது, எதிர்ககட்சிகளை நோக்கி அல்ல!

சஞ்சலமும் சந்தேகமும் கொண்டு, ஆருடம் பார்த்தபடி இருக்கும் அவருடைய
கட்சிக்காரர்களுக்கு, 'தைரியம்' ஊட்டுகிறார்; அஞ்சாதீர்கள்! நான இருக்கிறேன்-மரண
அடி கொடுக்கிறேன் எதிர்க்கட்சிகளுக்கு என்று பேசுகிறார்!

"பகைவின் கையைக்காலை வெட்டிப் போட்டுவிடுகிறேன், பயப்படவேண்டாம்"
என்று நிலப்பிரபுக்குத் தைரியம் ஊட்டிவிட்டு, 'செலவுக்கு' வாங்கிக்கொண்டு, உல்லா
சத்தைத் தேடிச் செலலும் உருட்டு விழியினா உள்ளனர்; அறிவோம் அல்லவா!

வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை, கற்பழிக்க முனைந்ததால் மூண்ட பகை
போன்றவைகளிலே சிக்கிக்கொள்ளும் சீமான், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று
அச்சம் கொண்டு நடுங்கிடும்போது, குத்திக கொலைபடுப்போன், குறி பார்த்து வேல் வீசு
வோன், மடக்கி அடிப்பான், மறைந்திருந்து வெட்டுவோன போன்ற போர்வழிகள்,
"ஐயா மட்டும் கொஞ்சம் தாரர்ளமாகச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்தால், ஒரு
நொடியிலே தீர்த்துக் கட்டிவிடுகிறேன்—தலை வேறு, முண்டம் வேறு ஆக்கிவிடுகிறேன.
ஐயா எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. நான காரியத்தைக் கச்சிதமாக முடித்துக்
கொடுக்கிறேன், ஐயா மட்டும் செலவுககுப் போதுமானதைத் தந்து பாக்கட்டும்.......
ஐயாவோட வம்புககு நின்றவனை உருத்தெரியாமல் செய்துவிடுகிறேன்" எனறு பேசுவர்;
பலர் சொன்னபடி படுகொலையும் செய்வா; பிடிபட்டால், தப்பவைக்க 'ஐயா' வருவார்
ஏதாவது வழி கண்டுபிடிப்பார், என்று துணிச்சலாகப் பாய்வர். இது கீழ் மட்டத்து
நிலைமை.

மேல் மட்டத்தில் — அதிலும் மக்களை நடத்திச் செல்லும் தகுதி பெற்றவர்கள்
என்ற விருதுகொண்ட அரசியல கட்சி மட்டத்தில — பொதுமக்களின் வெறுப்புக்கு
ஆளாகியுள்ள தன்னலக்காரர்கள்—தருக்கர்கள — தங்கள் மீது மக்களின சீற்றம் பாய்ந்
திடும், தங்கள் ஆதிக்கம் சாய்ந்துபடும் என்ற நிலை ஏற்படும்போது, காமராஜர்போல,
செலவாக்கினைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களை நாடுவர்; அப்போது காமராஜர்கள்
"பயப்படாதீர்கள்! எதிரிகளை ஒழித்துக்கட்டுகிறோம்; உங்கு ஒரு ஆபத்தும் வராதபடி
பார்த்துக்கொள்கிறோம்" என்று பேசி தைரியம் அளிப்பார்கள்.

அனைத்துலகப்பிரச்னைகள் அறியாரோ அவர்

எதிர்க்கட்சிகளுக்கு மரண அடி கொடுப்பேன்!—என்று காமராஜர் பேசியிருப்பது, இந்த விதமானது! வேறு இதிலே தனிச்சிறப்பு என்ன இருக்க முடியும்! இதில் என்ன தத்துவ விளக்கம் இருந்திட முடியும்! தேர்தலின்போது தங்கள் கதி என்ன ஆகுமோ என்ற கிலி கொண்டுவிட்டுள்ள கனதனவான்களுக்கு, காமராஜர் தைரியம் ஊட்டுகிறார்; செலவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு ஆளைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்று பேசுகிறானே 'அறிவாள் தூக்கி' அவன் போன்றோரின் பேச்சைத்தான் காமராஜரின் மிரட்டல் என் நினைவிற்குக் கொண்டுவந்தது.

குழி தோண்டிப் புதைப்பேன்
கூண்டோடு தொலைப்பேன்
பூண்டு இல்லாமல் ஒழித்திடுவேன்
மரண அடி கொடுப்பேன்

என்பவைகள், தம்பி! எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற்காகக் கூட அல்ல, சொந்தக் கட்சியிலே உள்ள சோர்வினைப் போக்கிடத்தான் என்பதைப் புரிந்துகொண்டால், நமக்குக் காமராஜரிடம் கோபம் வருவதற்குப் பதிலாக, பச்சாதாப உணர்ச்சிதான் எழும். அவரேகூடச் சில வேளைகளில் வருத்தப்படக்கூடும். இந்த வேலைதானா நமக்கு இப்போதுகூட! நாடு கொண்டாடுகிறது! உலகம் வரவேற்கிறது! இதழ்கள் பாராட்டுகின்றன! விழா எடுக்கிறார்கள்! விழுந்து வணங்குகிறார்கள்! வரம் கேட்கிறார்கள்! வழியிலே மலர் தூவுகிறார்கள்!!—ஆனால் நாம் என்ன வேலையில் ஈடுபட வேண்டி இருக்கிறது, எந்தப் பாணியில் பேசவேண்டி ஏற்படுகிறது, சே!—என்று அவரேகூடச் சில வேளைகளிலே எண்ணி, சலிப்பும், வருத்தமும் கொள்ளக் கூடும்.

"மேடை பிடித்தான்கள்" பேசவேண்டிய பேச்சல்லவா இது,

சில்லறைகள் அல்லவா இப்படிச் சீறிப் பேசுவர்,

சந்து முனைகளில் அல்லவா இப்படிப்பட்ட சிந்து கேட்கும்,

நாம் இப்படிப் பேசலாமா! ஆனால் பேசவேண்டி இருக்கிறதே!! இப்படிப் பேசித்தானே நம்மவர்களுக்குத் தெம்பு தரவேண்டி இருக்கிறது என்று எண்ணி அவர் வருத்தப்படாமலிருக்க முடியாது.

"கொப்பரை"கள்!

உட்பழமும் மேலோடும் முற்றியுள்ள
விளாம்பழத்தில் தனித்திருக்கும்;
அப்படியே தேங்காயும் இருக்குமெனத்
தேர்ந்தெடுக்கும் அறிவிலிக்கும்
இப்பொழுதுத் திட்டமிடும் இலக்கில்லா
அரசினர்க்கும் பட்டம் தந்தால்
ஒப்புடையப் பெயர்இன்றுக் "கொப்பரைகள்"
என்கின்ற ஒன்றுதானே!

—வளவனூர். இராசாராமன்.

ஆண்டு பல உழன்றவர் அரசியலில்; படிப்படியாக உயர்ந்தவர்; இன்று பலரும் பார்த்து பாராட்டத்தக்க நிலைக்கு வந்தவர்; ஆயினும் பாபம், மிகப் பழைய நாட்களில், தமிழக அரசியலில் கடைக்கோடி வரிசையில் இடம் பெற்றிருந்த நாட்களில், பேசிய பேச்சையா, இப்போதும் பேசுவது எவ்வளவு மேன்மையான வளர்ச்சி! ஆயினும் எத்தனை வேகமான வீழ்ச்சி!! ஏன்? பரிதாபம்!!

குற்றாலம் சென்று குழாயடியில் குளிப்பது போல,

திருக்குளத்தில் இறங்கி 'பாசி'யைப் பற்றி எடுத்து வருவதுபோல,

சந்தனத்தைக் கரைத்து மாட்டுத் தொழுவத்தில் தெளிப்பதுபோல,

கரும்பைக் கொண்டுவந்து அடுப்பெரிப்பதுபோல,

இசைப் புலமை பெற்ற பிறகு, கோட்டான் போலக் கூவிட முயல்வது போல,

பொன்னுடையை வாங்கி அதனை புழுதியைக் கட்டிடப் பயன்படுத்துவது போல,

யானைமீது அம்பாரி அமைத்து அமர்ந்து, பூனை பிடிக்கச் செல்வது போல,

உடைவாளை வீசி உருளைக் கிழங்கை வெட்டுவது போல,

பூந்தோட்டம் சென்று ஊமத்தம்பூ கேட்பது போல,

கழனியை உழுதுவிட்டுக் கள்ளிச்செடி நடுவதுபோல,

சாமியார் ஆகிவிட்டு மாமியார் வீட்டுக்குச் சாப்பிடப் போவதுபோல,

திருவிளக்கு வெளிச்சத்தில் திருட்டுக் கணக்கு எழுதுவதுபோல,

இளநீர் பருகிட மறுத்து கழுநீர் குடித்திடத் துடிப்பதுபோல,

தங்கத் தாம்பாளத்தில் தவிடு கொட்டி வைப்பதுபோல,

தம்பி! அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைவராகி இவர் இந்த 'மரண அடி' பேச்சுத்தானா பேசவேண்டும்.

இந்தியாவின் எல்லைப் பிரச்சினையை விளக்கக் கூடாதா! எதிர்பார்க்க மாட்டார்களா!!

சர்வதேசப் பிரச்சினைகளை அலசக்கூடாதா! பதவி அவ்வளவு பெரிதாயிற்றே!!

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் காட்டக்கூடாதா! இவரிடம் அதற்கான விவரம், விளக்கம் இருக்க வேண்டுமே!!

கொதித்ததே பத்து நாட்கள், பாராளுமன்றத்தில் அமீன்சந்த்பியாரிலால் விவகாரம், தேஜோவிவகாரம்,—சிறிதளவு அக்கறை காட்டக்கூடாதா அவைகளைப்பற்றி!

இருக்கும் தகுதி இதற்குத்தானு?

நாணய மதிப்புக் குறைப்பு, அதன் விளைவு, இவை பற்றிய விளக்கம் அளிக்கக் கூடாதா?

பணக்கார ஆதிக்கத்தைப் போக்க என்ன திட்டம் வைத்திருக்கிருர் என்பதனைக் கூறக் கூடாதா?

சேலம் இரும்பாலை—கல்பாக்கம் திட்டம்—சேது சமுத்திரத் திட்டம்-இவைகள் பற்றிப் பேசக்கூடாதா? மக்கள், கேட்க மறுப்பார்களா?

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழர்களுக்காக என்ன திட்டம் இருக்கிறது ஆளவந்தார்களிடம்? பர்மாவில் தமிழர்கள் விட்டு விட்டுவந்த சொத்து எப்போது கிடைக்கும்? என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது? சொல்லக் கூடாதா?

மொழிப் பிரச்சினைபற்றிப் பேசக்கூடாதா? ஏன் இன்னமும் நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட வடிவம் கொடுக்கவில்லை? விளக்கம் தரலாகாதா!

'மரண அடி கொடுப்பேன்' என்ற பேச்சுக்கு மட்டுந்தானு இத்தனை உயர்ந்த இடம் இருப்பவர் தனக்குத் தகுதி இருப்பதாக எண்ணிக்கொள்வது.

ஏன், அவர் பிரச்சினைகளைப்பற்றிப்பேசுவதில்லை? பிடி! அடி! விடாதே!! என்ற தெருக்கோடி ஒலி எழுப்புவதிலேயே சுவைகாட்டுகிருர்?

காரணம் இருக்கிறது தம்பி! தகுந்த காரணம் இருக்கிறது!

தெரியும் அண்ணு! தெரியும்! இருவருக்கு எந்தப் பிரச்சினையின் விளக்கம் புரிந்திருக்கிறது, மற்றவர்களுக்கு விளக்கிட!—என்று கூறுவாய், தம்பி! எப்படிப்பட்ட பதவியில் இருக்கிருர்; அவரைப்பற்றி இப்படிப்பட்ட கருத்துக்கொண்டிடலாமா? தவறுமிகத் தவறு!

பிரச்சினைகள் புரிந்திருக்கிறது என்கிருயே அண்ணு! அப்படியானல் ஏன் அவைகளைப்பற்றிப் பேசவில்லை — என்று கேட்கிருயா தம்பி! அவர் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினுல், அவருடைய கொலு மண்டபத்துக் கோமான்கள் உற்சாகம்கொள்ள முடியவில்லை.

அவர்கள் விரும்புவது தோள்தட்டி, துடைதட்டி, ஜல்லடம்கட்டி, 'கோதா'வில் இறங்கி, நண்டுப்பிடி போடுவது, மின்னல் தாக்குதல் நடத்துவது, கரடிப்பிடி போடுவது, மரண அடி கொடுப்பேன் என்று சவால் விடுவது ஆகிய இவைகளை.

அப்போதுதான் அவர்களுக்கு, அச்சம் குறைகிறது, உற்சாகம் பிறக்கிறது, ஒரு புது தைரியம் வருகிறது.

அதற்காகத்தான் அவர் பாவம், தமது நிலையையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த 'ஓங்கார'க் கூச்சலைக் கிளப்பிக் காட்டுகிருர்.

மரண அடி கொடுத்திடவேண்டும் என்ற கோபம் கிளம்பும் அளவுக்கு தி. மு. கழகம் என்ன கேடான காரியம் செய்தது? வன்முறையால் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டதா? வரிகொடா இயக்கம் நடத்தி சர்க்கார் நடக்கவிடாமல் செய்ததா? வகுப்புக் கலவரத்தை மூட்டிவிட்டு, சமூகத்திலே சிதைவு ஏற்படச் செய்ததா? கள்ளமார்க்கெட் நடத்துபவனுக்கும் கொள்ளை இலாபம் அடிப்பவனுக்கும் துணை நின்றதா? என்ன கேடு செய்தது?

ஆளுங் கட்சியான காங்கிரசை ஆட்சிப் பீடத்திலிருந்து கீழே இறக்கவேண்டும் என்பதற்காக வேலைசெய்கிறது.

ஆட்சிப் பீடத்தில் பல ஆண்டுகளாக இருந்தும் மக்களுக்கு முழுவாழ்வு அளிக்கத் தவறிவிட்டதால், ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா? என்று கேட்கிறது.

அவ்விதம் கேட்பதும் ஆட்சியை மாற்றுவதும் ஜனநாயகக் கடமை என்பதால், தி. மு. க. அந்த முனையில் வேலைசெய்கிறது. இதுதவருகுமா? இதற்காகவா, கழகத்துக்கு மரண அடி கொடுக்க நினைக்கிருர்!

கோபம், காரணமற்றது! உள்ளது பறியோய்விடுமே. சுவைத்ததை இழந்திடவேண்டி வருமே என்பதாலே கிளம்பிடும் அச்சம் அவ்விதம் பேசவைக்கிறது.

அதற்குத் தேவைப்படும் வலிவு, காங்கிரசிடம்—காமராஜரிடம் இருக்கிறது என்றே வைத்துக்கொள்வோம்—வலிவு இதற்குத்தானு பயன்படவேண்டும்!

ஒரு கட்சிக்கும், ஒரு பெரிய தலைவருக்கும் வலிவு இருக்குமானுல், அந்த வலிவு எதற்குப் பயன்படுத்தப் படவேண்டும்? உருட்டல் மிரட்டலுக்கா!

பஞ்சம் பிணி போக்கிட,
வளம் பெருக்கிட,
புதுவாழ்வு அமைத்திட!
நாட்டு மானம் காத்திட

இவை போன்றவைகளுக்கல்லவா வலிவு பயன் படுத்தப்படவேண்டும்? செய்து முடிக்கவேண்டியவைகளை,

நாணயக் குறைப்பின் எதிரொலியா?

பணத்தைப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் உண்டிகளோ, பொன்-வெள்ளிக் கட்டிகளோ, அவற்றுலான ஆபரணங்களோ எதுவானுலும் நாட்டைவிட்டு வெளியே எடுத்துச்செல்லக் கூடாது!

இப்படி ஒரு புதிய தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது சிக்கிம் அரசு.

இதனுல் இந்திய வணிகர்கள்தான் மிக அதிக அளவுக்குப் பாதிக்கப்படுவார்களாம்!

1950 முதல் இந்தியா - சிக்கிம் இடையே சுதந்திரமான வணிகப் பரிவர்த்தனைக்கு ஒரு ஒப்பந்தம்கூட இருக்கிறதாம்!

பேட்டை பெரியவர் பேசாததொன்றுண்டா?

செய்வதற்கான இடத்தில் இத்தனை ஆண்டுகளாக இருந்துகொண்டு, செய்து முடித்திட அந்த வலிவு பயன்படக் காணோம்; வீருப்புப் பேசுகிருர்—மரண அடி கொடுப்பேன் என்பதாக. என்னமோ இவர் இத்தனைக் காலமாகப் போனால் போகட்டும் என்ற போக்கிலே இருந்தவர் போலவும், தி. மு. கழகம் வளர்ந்து போகட்டுமே என்று கருதி வாளாக இருந்தவர்போலவும், இப்பொழுதுதான், கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற நினைப்பே வந்ததுபோலவும் எண்ணிக் கொள்ளச் சொல்லுகிருரா?

முன்பாகிலும், கழகத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்கு ஒரு காரணம் காட்டிக் கொண்டிருந்தார்கள். 'ஓட்டு' கேட்கிறது நாட்டை ஆளவிரும்புகிறது என்பதுபற்றி எமக்குக் கோபம் இல்லை. ஆனல் இந்தக் கழகம் நாட்டைஅல்லவா பிளக்கவிரும்புகிறது; பிரிவினை அல்லவா கேட்கிறது! இது பெரியதோர் ஆபத்தல்லவா? இதனை அனுமதிக்கப் போமா! அதனால்தான் இந்தக் கழகத்தை ஒழித்தாகவேண்டும் என்கிறோம். அறிக! அறிக!—என்று ஆர்ப்பரித்தனர்; கழகமோ, நாட்டைத் துண்டாடும் திட்டத்தை விட்டுவிட்டது. மரண அடி கொடுக்கவேண்டும் என்று இப்போது ஏன் கூறவேண்டும்?

முன்பு, நாடு பிளவுபடாதிருக்க கழகத்தை ஒழித்திடவேண்டும் என்று பேசினர்.

இப்போது? கோபத்துக்குக் காரணம்?

பதவியைப் பறித்துக்கொள்ளத் திட்டமிடுகிருர்களே என்பதுதானே!

அதற்கான வலிவும் வளர்ச்சியும் பொதுமக்கள் ஆதரவினல் கழகத்துக்குக் கிடைத்துக் கொண்டு வருகிறது என்பதாலே ஏற்பட்டிருக்கும் எரிச்சல்தானே, கோபத்துக்குக்காரணம்?

சரி! கோபம் கொண்டதற்கான காரணம்கூட கிடக்கட்டும்; மரண அடி கொடுக்கிறேன் என்கிருரே அதற்குத் தேவையான 'வலிவு' உள்ளபடி இருக்கிறதா? இருந்திருந்தால், கழகம் இந்த வளர்ச்சிபெற்றபோது, என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

உணர்வாய்!

நஞ்சையொடு புஞ்சையெலாம் இருந்தும் இங்கே
நல்லபல கனிப்பொருள்மண் ணகத்தி ருந்தும்;
வஞ்சியர்க்கு முல்லையுடன் முத்தி ருந்தும்;
வளங்கொழிக்கும் கடலிருந்தும்; காடி ருந்தும்;
மஞ்சளொடு இஞ்சிருந்தும்; மலையி ருந்தும்
மங்காத புகழளிக்கத் தமிழி ருந்தும்;
வஞ்சகரின் துரைத்தனத்தால் வாழ்ந்தோ மில்லை!
வாழ்ந்துகெட்ட தமிழ்மகனே! உணர்வாய் இதை!

—கடலூர். இராமையன்.

கழகமா! அதற்குச் செல்வாக்கா! எதைக்கொண்டு சொல்லுகிறீர்கள். கூட்டத்திற்கு ஆள் சேருகிறதை அதைப் பார்த்தா? பைத்யக்காரன் பின்னுலேகூடத்தான் பத்து பேர் செல்கிருர்கள்; வேடிக்கை பார்க்க! அந்தக் கும்பலைக் கண்டு, அவனுக்குப் பெரிய செல்வாக்கு என்று சொல்லிவிட முடியுமா—என்று பேசிப் பார்த்தார் பேட்டைப் பெரியவர்; கோட்டையிலே கொலுவிருக்கிறோம் என்ற துணிச்சலால்.

தெருக்கோடியிலே பிச்சைக்காரன் இனிமையாகப் பாடினல், அவனைச் சுற்றி ஒரு கூட்டம் சேரும்; காசுகள்கூடப் போடுவார்கள்! அதனல் அந்தப் பிச்சைக்காரன் பெரிய மனிதனுகிவிடுவான என்று கேட்டார் விருதுநகர் வல்லவர்.

ஆனல் பொதுமக்கள் இத்தகைய பொறுப்பற்ற முறையிலே நினைக்கவில்லை; கழகத்தை ஆதரிக்கலாயினர்.

கை தட்டுவார்கள், ஆனல் ஓட்டுப் போடுவார்களா?

என்று கேட்டுக் கெக்கலி செய்தார் காமராஜர். கழகம் 'ஓட்டு' கேட்டது. பொதுமக்கள் முதல்முறை 1,628,598 ஓட்டுகளை வழங்கினர்.

வெட்ட வெளியோடு சரி, இவர்களை எவனவது சட்டசபைக்கு அனுப்பிவைப்பான? என்று பேசியவர்கள், பொதுமக்கள் கழகத்துக்குத் தந்த ஆதரவின் கணக்குத் தெரிந்தபிறகாகிலும், ஜனநாயகப் பண்பின்படி, கழகத்துக்கு உரிய மதிப்பு அளித்திட முன்வந்தனரா? இல்லை!

கண்டபடி எழுதுகிருர்கள் கழகத்துக் காரர்கள்.

இவர்கள் கை கட்டை விரலை வெட்டி விடுவேன்!!

என்று பேசினர், கண்ணியம் மிக்க காமராஜர்.

அவர் அளவுக்கு ஆத்திரப்படாதவர்கள், 'ஐயோ பாவம்' என்று பச்சாதாபப்பட்டு, சிலர் ஓட்டுப் போட்டு விட்டார்கள். அடுத்த தடவை பாருங்கள் அந்தக் கழகம் என்ன கதியாகிறது என்பதை. மழை காலத்துக் காளான் சூரிய வெப்பம் பட்டதும் கருகிப் போவதுபோல, இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்து போய்விடும் என்று ஆருடம் கணித்தார்கள்.

ஆனல் பொதுமக்கள் இரண்டாவது முறை கழகத்தை மேலும் அதிக அளவு ஆதரித்து 34 இலட்சம் வாக்குகளை வழங்கினர்.

இவ்விதம் இருமுறை மக்கள் கழகத்தை ஆதரித்தும், பெறவேண்டிய தெளிவைப் பெருமல், இந்த முறை பாருங்கள்! மரண அடி கொடுக்கிறேன்!! — என்று பேசுகிருர், காமராஜர்.

"பெரியவர்" என்ற புதிய பட்டம் சூட்டி இருக்கிருர்கள், அவருக்கு. 'பெரியவர்' ஆனது இதற்குத்தான?

முன்னாளில் சொன்னதை மக்கள் மறந்தாரோ

கூட இருந்து கும்மி கொட்டுபவர்களின் 'கோவிந்தா' கோஷம் இப்படியுமா அவரை பாழ்படுத்தி விடுவது.

பாரினில் இவர்போல் யாம் கண்டதில்லை —என்று அவர்கள் பாடிடும் பஜனை கேட்டா இவ்வளவு மயக்கம் இவருக்கு ஏற்பட்டு விடுவது!

ஆத்திச் சூடி தெரியுமா ஐயா! என்று இவரைக் கேட்டவர்கள்தான் இன்று அகில உலகில் இவர்போல் ஒரு தலைவர் இல்லை! என்று அர்ச்சிக்கிறார்கள் என்பதை இவர் அறியாரா?

எதனையும் சகித்துக் கொள்வேன், ஆனால் என் தலைவன்மீது ஒரு துளி எச்சில் துப்பினாலும், விடமாட்டேன் ஒழித்திடுவேன் என்று இன்று பேசிடும் 'பக்தர்'கள், என்னைத் தமது தலைவன் என்று கொண்டிருந்தபோது, எவனாவது எங்கள் அண்ணன்மீது வசை உமிழ்ந்தால் "பாதக் குறடெடுத்து பன்னூறு அடி அடிப்பேன்" என்று பாடினவர்கள் என்பதை அறியாரா?

சிறுவர்களுக்கான பாடப் புத்தகத்தில், 'ராஜபக்தி'க்கான பாடம் ஒன்று உண்டு;

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதுதான் பாடம்! ஒரு ராஜாபோய், வேறோர் ராஜா பட்டத்துக்கு வந்தபின், பழைய படம் எடுக்கப்பட்டு, புதிய ராஜாவின் படம் போடப்படும். படம்தான் மாறும்! பாடம் அப்படியேதான் இருக்கும்.

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதற்கு ஒப்பான அரசியல் நடத்துபவர்கள் மொழிந்திடும் புகழுரை கேட்டு மயங்கியா, இந்தப் பூலோகமே தன் காலடியில் பந்தாகிக்கிடக்கிறது என்று மயக்கம் கொண்டுவிடுவது! நல்லது செய்யாதே அந்த மயக்கம்!

மரண அடி கொடுப்பேன் என்று பேசுகிறாரே; கேட்டிடும் குட்டிக் குபேரர்கள் கைதட்டி மகிழ்ச்சி காட்டுகிறார்களே; பிறகு அவர்கள் சிந்திக்கமாட்டார்களா. எந்தவிதமான வசதியுமில்லாமல், எல்லா முனைகளின் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு இந்தக் கழகம் இவ்வளவு வளர்ந்திருக்கிறதே; இப்போது மரண அடி கொடுப்பேன் என்று பேசிடும் பெரியவர், முன்பு பல முறை கழகத்தை ஒழித்துக் கட்டுவதாகச் சொன்னவர்தானே; செய்தாரில்லையே; இப்போது மட்டும் எப்படிச் செய்வார் என்று யோசிக்கமாட்டார்களா; யோசித்திடும்போது நமது பேச்சு வெறும் உருட்டல் மிரட்டல்தான் என்பது புரிந்துவிடாதா — என்றெல்லாம் காமராஜர் எண்ணிப் பார்க்கமாட்டாரா? நேரம் இல்லை பாவம், அவர் என்ன செய்வார்! சூழ்ந்து கொண்டுள்ள 'சூடமேந்திகள்' அவருடைய சிந்திக்கும் சக்தியை பொசுக்கிவிடுகின்றனர்.

தம்பி! 1962ம் ஆண்டுக்கும் 1967 பிறக்கப்போகிற கட்டமான இப்போதைக்கும் இடையில் காங்கிரசுக் கட்சிக்குத்தானாகட்டும், காமராஜப் பெரியவருக்குத்தானாகட்டும், கழகத்துக்கு மரண அடி கொடுக்கத் தக்க விதமான புதிய வலிவு என்ன கிடைத்துவிட்டது என்பது எப்போதாவது, எங்கேயாவது, எவராலாவது விளக்கப்பட்டுக் கேட்டதுண்டா?

1962-ம் ஆண்டு காங்கிரஸ் சில இடங்களிலே தோற்பதற்கும், எதிர்க்கட்சிகள் தேர்தல் களத்திலே வெற்றி பெற்றதற்கும் காரணம்,

வரி அதிகமானது

விலைவாசி ஏறியது

உணவு நெருக்கடி

ஏழை எளியோர் துயரம்

போன்ற நிலைமைகள். இதனால் மக்களுக்குக் காங்கிரசிடம் ஒரு கசப்புணர்ச்சி; கோபம்; பாடம் கற்பிக்க வேண்டும் என்ற துடிப்பு; அதன் காரணமாகக் காங்கிரசைத் தோற்கடித்தார்கள். ஆனால் 1967-ம் ஆண்டு வேகமாக வந்துகொண்டிருக்கும் இப்போது அந்த மோசமான நிலைமைகள் மாறிவிட்டன: மக்கள் கசப்புணர்ச்சி கொள்வதற்குப் பதிலாக களிப்புணர்ச்சி கொண்டுள்ளனர்: அதற்கான முறையில்,

உழுபவனுக்கே நிலம் என்று ஆகிவிட்டது.

தொழிலாளருக்கு நீதியும் நிம்மதியும் கிடைத்திருக்கிறது.

உணவு நெருக்கடி போக்கப்பட்டுவிட்டது.

விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வரிகளையும் குறைத்தாகிவிட்டது.

ஏழை எளியோர் புன்னகை புரிகிறார்கள்.

ஆகவே இந்த முறை மக்கள் காங்கிரசிடம் பாசம் காட்டுவர், எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு காட்டமாட்டார்கள்—என்று கூறமுடியுமா — கூசாது பொய் பேசிப் பழக்கப்பட்டவர்களால்கூட? முடியாது.

1962-ம் ஆண்டு இருந்த நிலைமையைவிட மிக மோசமான நிலைமை அல்லவா இப்போது; எல்லாத் துறைகளிலும். அப்போது இருந்துவந்த அல்லல்

(13-ம் பக்கம் பார்க்க)

தனியாகவே சந்திக்கிறோம்!...

எப்படியும் பிழைக்க வைத்துவிட வேண்டும் என்று மேற்கொண்ட கடைசி முயற்சியும் படுதோல்வி யடைந்துவிட்டது.

கேரள பிரதேச காங்கிரசுக்கும் போட்டிக் காங்கிரசுக்கும் உள்ள பிணக்கை யகற்றி ஒற்றுமை உணர்வுடன் தேர்தலில் ஈடுபடச் செய்ய முன்வந்தார் டாக்டர் செபஸ்தியன் வவாலில் என்ற பாதிரியார்!

தனித்தனியாக இன்றி, ஒரே அபேட்சகர் பட்டியலின் கீழ் (அதாவது ஒரே கட்சியாக இருந்து) செயல்பட வேண்டும் என்றார்களாம்! போட்டிக் காங்கிரஸ் இதனை மறுத்து - தனியாகவே போட்டியிடப் போவதாகக் கூறிவிட்டதாம். மூன்று மணி நேரப் பேச்சுக்குப் பின்னர்!

2—17

புலிக் குகையில்!

அஞ்சலையைத் தூக்கிக்கொண்டு இரு முரடர்கள் ஓடியதை அகலவிரித்த கண்களோடு பார்த்தபடி, மரத்தோடு மரமாக இளந்திரையன் நின்றுவிட்டான்.

கொடிகளால் அவன் உடல் மரத்தில் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. மின்னல்போல் முரடர்கள் வந்து, புயல்போல் அந்தப் பூங்கொடியாளை வாரிக்கொண்டுபோய் விட்டார்கள். அவன் கண்ணெதிரில்தான், அந்த அக்கிரமம் நடந்தது. அதனால் ஏற்பட்ட திகைப்பு, அவனது நினைவையே தடுமாறச்செய்துவிட்டது. எதிரிலிருந்த குளமும், அதன் கரைமீது வானளாவ வளர்ந்திருந்த மரங்களும், தலைகீழாகச் சுற்றுவதைப்போல அவனுக்குத் தோன்றியது.

சிறிதுநேரம் சென்றபிறகுதான், அங்கு நடந்தவை அவன் கவனத்திற்கு மெள்ள வந்தன.

"ஆ!" என்று அலறிவிட்டான் -இதயத்தின்மீது விழுந்த சாட்டையடியைத் தாளமுடியாமல்!

கண்கள் சிவந்தன. கைகால்கள் துடிதுடித்தன. மனங்கொதித்தது. மார்பு விம்மிவிம்மி பெருமூச்சை வெளியே தள்ளியது.

"உத்தமர் பொன்னையாவின் உடன் பிறந்தவளைக் கயவர்களிடமிருந்து காப்பாற்றும் அளவிற்கு, தோள் வலிமையும் உள்ள உரமும் இல்லாமல் போய்விட்டேனே!" என்று மரத்தில் தலையை மோதிக் கொண்டான்.

"அஞ்சலை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து, அவளைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை! அந்தக் கடமையை முடிக்கும்வரை ஊண் உறக்கம் கொள்ளப்போவதில்லை-ஊருக்கும் திரும்பப்போவதில்லை!" என்று சொல்லிக்கொண்டே, தன் உடலை ஒரு குலுக்குக் குலுக்கினான்.

கட்டுகள் தளர்ந்தன. கொடிகள் ஒவ்வொன்றாக அறுந்து விழுந்தன.

முகத்தைத் துடைத்துக்கொண்டு கைகால்களை உதறிக்கொண்டு, அஞ்சலையைத் தூக்கிச் சென்ற திசையில் ஓடினான்.

சிறிது தூரம்தான் காலடிச் சுவட்டைப்பின்தொடர்ந்து அவனால் செல்ல முடிந்தது. அதற்குமேல் சுற்றிலும் பாறைகள் நிறைந்த பிரதேசமாக இருந்ததால், அவர்கள் எப்பக்கம் சென்றிருப்பார்கள் என்பதை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

சோர்ந்துபோய் பாறையின்மீது உட்கார்ந்துவிட்டான். என்ன செய்வது, எத்திசையில் செல்வது என்பவை ஒன்றும் புரியாமல் அவன் மனம் குழம்பியது. வெயிலின் உக்கிரம் நொடிக்கு நொடி அதிகமாகிக் கொண்டே இருந்தது. உடலெல்லாம் வியர்வை கொட்டக்கொட்டக் கன்னத்தில் கைவைத்தபடி அவன் உட்கார்ந்திருந்தான்.

அஞ்சலையைப் பற்றிய எண்ணம் அவனது இதயத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது. கவலையுடன், பாறையை விட்டு அவன் எழுந்தான். கால்கள் சென்ற திசையில் போனான்.

"அஞ்சலையை அப்படித் தூக்கிச் சென்றவர்கள் யார்?" என்ற கேள்வி, அவன் மனத்தில் அடிக்கடி எழுந்து நின்றது.

அவனைப் போலவே அஞ்சலையின் மனத்திலும், 'இந்த மாளிகையினின்றும் எப்படித் தப்பப் போகிறோம்?' என்ற பயமும் கவலையும் குமுறிக் கொண்டிருந்தன.

நாற்புறமும் மதில்களால் சூழப்பட்ட ஒரு மாளிகையில் அவள் அடைப்பட்டிருந்தாள். அந்த மாளிகை, கனகசேனனின் மாளிகையைப்போல அவ்வளவு பெரியதோ அலங்காரங்கள்நிறைந்ததோ அல்லவென்றாலும் சிறியதாகவும் அழகியதாகவும் இருந்தது.

கனகசேனனின் மாளிகையில் பல பணிப் பெண்கள் இருந்தார்கள். அவர்கள் அதிகம் பேசாவிட்டாலும், கேட்டவற்றுக்காகிலும் பதிலளித்தார்கள். இங்கோ ஒரே ஒரு வேலைக்காரி—கொஞ்சம் வயதானவள். அவளுக்கோ காது கேட்காது. சுத்தச் செவிடு! ஏதாவதுகேட்டால் கேட்பதைப் புரிந்துகொள்ள ஒரு நாழிகையாவது பிடிக்கும்—புரிந்துகொண்டதற்குப் பயந்து பயந்து பதிலளிக்க, அதற்கொரு நாழிகை பிடிக்கும்!

அஞ்சலைக்குச் சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை. கோமாளியான கனகசேனனின் காவலிலிருந்து தப்பிவிட்டோம் என்று எண்ணிக் களித்தவள் — இப்பொழுது வேறொருவன் மாளிகையில்! சிங்கத்தின் கையை விட்டுத் தப்பியோடப் போக, புலிக்குகையில் வந்து சிக்கிக் கொண்டாள்.

சோலையப்பனின் பெயரைச் சொல்லித் தன்னை ஏமாற்றி அழைத்து வந்து, இப்படிக் கூண்டுக்கிளியாக்கி விட்டவன் தூமகேதுவைத் தவிர வேறு யாருமில்லை"என்பதை அவள் நிச்சயம் அறிவாள்.

"இந்த முதலையிடமிருந்து எப்படித் தப்பப் போகிறோம்?" என்ற ஏக்கத்தோடு மாளிகையின் மாடியில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தவள், கீழே தோட்டத்தில் யாரோ பேசும் குரல் கேட்கவே, மெள்ள வந்து எட்டிப் பார்த்தாள்.

"நேராக மதுரைக்குப் போய்ச் சேருங்கள்! வழியில் எங்கேயாகிலும் ஆடிப் பாடிக் கொண்டிருந்துவிடப் போகிறீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே, அஞ்சலையைத் தூக்கிக் கொண்டுவந்த அந்த இரண்டு முரடர்களுக்கு, இரு பைகள் நிறைய பொன்னைத் தூமகேது கொடுத்தான்.

பொன்னைப் பெற்றுக்கொண்ட அந்த முரடர்கள் பயபக்தியோடு தூமகேதுவிற்கு வணக்கம் செய்து

விட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றனர்.

“தூமகேதுவிடம்தான் நாம் சிக்கிக்கொண்டோம்! புலி வாயில் சிக்கிய மான் பிழைத்ததுண்டா?’ என்று கண்கள் கலங்க முணுமுணுத்துக் கொண்டே, கட்டிலில் போய் விழுந்து விம்மினுள்.

அந்தக் கயவன் அறையினுள் வராதபடி கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டு விடலாம் என்ற எண்ணத்தோடு கூந்தலைச் சரிசெய்து கொண்டு எழுந்தாள்.

அந்த அறையின் கதவுகளுக்குத் தாழ்ப்பாளே இல்லை என்பதைக் கண்ட பிறகே, அவள் மனம் பகீர் என்றது! கதவு அருகில் அப்படியே திகைத்து நின்றுவிட்டாள். அவள் தலை சுற்ற ஆரம்பித்தது. கட்டிலின் ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு தரையில் உட்கார்ந்துவிட்டாள்.

“விடு! விடு! என்னை விடு!”

“அஞ்சலை! வீணுகப் பிடிவாதம் செய்யாதே! நான் சொல்வதைக் கேள். உன்னை ராணியாக்கிவிடுகிறேன்!

“அரசனுகக்கூட, நீ திட்டம் தயாரித்து விட்டாயோ?”

“நான் ஏன் அஞ்சலை அரசனுக வேண்டும்! குலசேகரனுக்கு உன்னை மனைவியாக்கி விடுகிறேன! என் சொல்லை அவன் ஒருநாளும் தட்டமாட்டான்! ஒரு முறை நீ என் இச்சைக்கு இணங்கினுல் போதும்—பார் அந்தப் பாண்டியனை உன் பாதங்களில் விழுந்திருக்கும்படிச் செய்கிறேன்!”

“ஓகோ — என்னை ராணியாக்கி விடுகிருயா—உனக்கு ஒரு முறை சரி என்றுல்! நாடற்றவனே. நல்ல பண்பு அற்றவனே, உனக்குத் தெரியுமாடா தமிழ்ப் பண்பு? திரௌபதியின் இனத்தில் பிறந்தவள் அல்லடா நான் — கண்ணகியின் வம்சத்தில் வந்தவள்!”

“அட அட! அப்படியா?”

“மாமிசப் பிணமே, ஏன் சிரிக்கிருய்?’

“நீ கண்ணகி என்றுயே, அதையும்தான் நான் பார்க்கப்போகிறேன்!”

அண்ணன் பொன்னையா இறந்த அன்றிரவு, தனியாக இருந்த தன்னைப் பலாத்காரம் செய்ய முனைந்த தூமகேதுவிற்கும் தனக்கும் நடந்த இப் பேச்சு, அவள் காதில் ஒலித்தது.

“நீ கண்ணகி என்றுயே, அதையும்தான் நான் பார்க்கப்போகிறேன்!”

இந்த வார்த்தைகள் திரும்பத்திரும்ப அவள் கவனத்திற்கு வந்து கொண்டே இருந்தன.

“இப்பொழுது வருவானே! அந்தப் பழைய வஞ்சததை மனதில் வைத்துக்கொண்டு, என்னைக் கசங்கிய மலராக்கித் தூரத் தூக்கியெறிந்துவிட்டுப்போடவிடுவானே! அய்யோ! நான் என்ன செய்வேன்? இந்த ஆபத்தினின்றும் எப்படித் தப்பப்போகிறேன்? தப்புவதா? அதுதான் முடியாது இனி! தாருகாவனத்து ரிஷி பத்தினிகளையே கற்பழிக்க முனைந்த சிவனின் சீடனதான் இவன்! என்னை இவனு சும்மா விடுவான்! அய்யோ!’ என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

அவள் நினைவு சுற்றியது. வேக வேகமாகச் சுற்றியது. அந்தச் சூழலில் சிக்கிய அவள் உடல, அப்படியே தரையில் சாய்ந்துவிட்டது.

மலர்கள் பூத்திருக்கும் சோலையில் ஒரு சலவைக்கல் ஆசனம். அதன்மீது அவளும் கனகசேனனும் அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருர்கள்.

“அஞ்சலை! தாகம் அதிகமாகிறதே!”

“தாகமா? இதோ, தண்ணீர் கொண்டு வருகிறேன்!”

அவள் ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கிருள். அவளது வளைக்கரத்தைப் பிடித்து இழுத்து உட்கார வைக்கிருன் கனகசேனன்.

“பக்கத்திலேயே தடாகமிருக்க, தண்ணீருக்கு வேறு எங்கே செல்கிருய்?”

அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, தடாகம் இங்கு எங்கும் காணேயே? என்கிருள்.

“நான் காட்டட்டுமா, கண்ணே”

“உம்!”

“இதோ!” என்று புன்னகையோடு அவளைக் காட்டுகிருன்.

“ஓகோ! இந்தத் தடாகமா? புரிகிறது புரிகிறது தங்கள் உள்ளம்!”

“அஞ்சலை!”

“என்ன இளவரசே!”

“இளவரசே! காதல் உலகத்தில் அந்தப் பதம் அர்த்தமற்றதாயிற்றே!”

“அர்த்தமற்றதுதான். அனுதையான நான் தங்கள் மீது அளவு கடந்த காதல்கொண்டிருப்பதும்!”

“என்னை நம்பு அஞ்சலை!”

“உங்களை நம்பாதவர் இந்த உலகத்தை எப்படி நம்பமுடியும், இளவரசே?”

"உன் பேச்சு எனக்குப் புரிய வில்லையே, கண்ணே!"

"இளவரசே! துள்ளும் நம் காதல் உள்ளங்களைத் துண்டிக்க, ஏதேதோ சக்திகள் கொக்கரித்து எழும்! நான் ஏழை! வாழ்க்கை யின் ஓரத்தில் ஒதுக்கித் தள்ளப் பட்டிருக்கும் பரம ஏழை!"

"யார் ஏழை? அழகு, அன்பு, அறிவு என்ற செல்வங்களை அபரி மிதமாகப் பெற்றிருக்கும் நீயா ஏழை?"

"இந்த விளக்கத்தைக் கேட் போர் விலாநோகச் சிரிப்பார்கள்!"

"சிரிப்பார்கள்! உண்மைதான்! அரண்மனை வாசிகளுக்கு நானொரு புதுப்பாடம் கற்பிக்கப்போகிறேன் அஞ்சலை, காதலுக்கு ஏற்றத் தாழ்வு......"

"இல்லை என்று கவிதை களிலும் காவியங்களிலும் சொல்கின்றனர்! ஆனால் அரசர் இசைவாரா — நம் திரு மணத்திற்கு!"

"அவர் ஒப்பினாலும் ஒப்பா விட்டாலும், நாம் மணப் போம்! பரம்பரை வழக்கத் தின் மரணக் கதறலினால், நம் பரவசத்தைக் குறைக்க முடி யாது. கண்ணே!"

"இப்படியே ஆசை மொழி பேசி என்னை ஏமாற்றி விடுவீரா?"

"ஆமாம், ஏமாற்றிவிடுவேன்! உன்னையல்ல, உளுத்துப்போன இந்த உலகத்தையும், அதன் காவல ரான என் தந்தையையும்!"

"கடமை வீரர்தான் நீங்கள், ஆனால் இந்தக் கன்னியின் உள்ளத் தைக் களவாடிக்கொண்ட கள்வரு மாவீர்!" என்று சொல்லிக் கொண்டே அவன கைகளை எடுத்து மார்பில் அழுத்திக்கொள்கிறாள்.

'ஓகோ, கள்வனுக்குத் தண்டனை கிடையாதோ?" என்று அவள் கன்னத்தைக் கிள்ளுகிறான்.

"ஏன் கிடையாது? உம்மைக் கட் டப் போகிறேன்!"

"கயிற்றாலா!"

"ஆமாம், திருமணம் என்ற கயிற்றால்!.........உம்மைத் தள்ளப் போகிறேன்......"

"சிறைக் கோட்டத்திலா?"

"அல்ல குமரிக் கோட்டத்தில்!"

"அழகாக பேசக் கற்றுக்கொண் டாயே!"

"அர்த்தத்தோடு பேசக் கற்றுக் கொண்டேன் என்று சொல்லுங் கள்!"

"இனி நான் பேசமாட்டேன்!"

"எதற்கு?"

"இதற்கு என்று அவளது கன் னத்தல் ஒரு முத்தம் வைக்கிறான்."

"போங்கள் இளவரசே!"

"சரி போகிறேன்!" என்று அவன் எழுந்துபோக ஆரம்பிக் கிறான்."

'ஆ!' என்று அவள் அலறுகிறாள். கண்களில் ஏதோ விழுந்துவிட்ட தைப்போலப் பாசாங்கு செய் கிறாள்.

அவன் பதைபதைப்போடு அருகே ஓடி வந்து,

"என்ன அஞ்சலை — கண்ணில் என்ன பட்டது?" என்கிறான்.

"ஏமாந்துவிட்டீரா?" என்று அவள் கலகலவென்று சிரிக்கிறாள்.

"ஓகோ சரிசரி.........அய்யோ, பாம்பு! பாம்பு!" என்று அவன் பதறுகிறான்.

"எங்கே? எங்கே?" என்று கண் கள் மிரளக் கேட்கிறாள்!"

"இதோ! இதோ!"

"எங்கே இளவரசே, எங்கே!"

"இதோ!' என்று அவளது கூந் தலைப் பிடித்துக்காட்டுகிறான்.

அவள் நாணத்தோடு தலை குனிந்துகொண்டு, குறும்போடு ஓர விழிகளால் பார்க்கிறாள்.

"அஞ்சலை, அதோ அந்தத் தடா கத்தின் கரைமீது போய் உட்கார லாம் வா! உனக்கு அருமையான காதல் கதை சொல்கிறேன்!

"ஊம்! ஊம்! எனக்குக் காதல் கதை என்றாலே, கட்டோடு பிடிக் காது!"

"உனக்குப் பிடிக்காததைச் சொல்வதில்தான், எனக்குப் பிரி யம் அதிகம்! ஆமாம்! வா! வா!" என்று கையைப் பிடித்து இழுக் கிறான்.

"முடியாது! முடியாது! என்று அவள் திமிறுகிறாள்.

அஞ்சலையின் மயக்கம் படிப்படி யாகத் தெளியஆரம்பித்தது. இருள் கப்பிய படுகுழியில் விழுந்துவிட்ட தான் மெள்ள மெள்ளக் கரை ஏறு வதாக அவளுக்குத் தோன்றியது.

கனகசேனனோடு கைகோர்த்துக் கொண்டு நந்தவனத்தில் இருந் தோமே, இதென்ன சித்தப் பிரமை என்றெண்ணியதும், அவள் உள் ளம் திடுக்கிட்டது.

கனகசேனனைக் கண்டு அவள் வெறுப்பும் வேதனையும் அடைந் தாளே அன்றி, அன்பும் ஆசையும் கொள்ளவில்லை. ஆனால் அவன் பக் கத்தில் உட்கார்ந்து, கையோடு கைகலக்க, உல்லாசமாகப் பேசிச் சிரிப்பதாக மன மயக் கம் உண்டாயிற்றே — ஏன்? அதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் அவள் தத்தளித்தாள்.

அந்தத் தத்தளிப்பிற் கிடையே, தூமகேதுவின் நினைவு அவள் உள்ளத்தில் பளிச்சிட்டது. உடனே அவ ளுக்குத்தான் இருக்கும் ஆபத் தான நிலைமை கவனத்திற்கு வந்தது. 'இந்த நரகக்கடியினின்றும் தப்புவது எப்படி?" என்று அலை மோதிய அவள் மனத்தில், ஒரு யோசனை மின்னல்போல் தோன் றியது.

"ஆமாம், அதுதான் சரியான வழி! அப்படிச் செய்தால்தான், இந்தப் புலிக் குகையினின்றும் நான் தப்பமுடியும்!" என்று தனக் குத்தானே சொலலியவாறு, சரிந்து வீழுந்திருந்த ஆடையைச் சரி செயதுகொண்டு அவிழ்ந்திருந்த கூந்தலைக் கோதிமுடித்துக்கொண்டு கட்டிலின்மீது போய் உட்கார்ந் தாள்.

"ஆகா!" என்று சொல்லி 'களுக்' கென அவள் சிரித்துப் பார்த்தாள். அந்தச் சிரிப்பு அறையில் எதி ரொலித்து அவள் முகத்தை மலரச் செய்தது.

தலையணைமீது சாய்ந்து படுத்து, உதடுகளில் புன்னகையைக் கொண்டுவந்து நிறுத்தினாள்.

(வளரும்)

பெற்ற புகழில் பிறந்ததோ ஆணவம்?

9-ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ந்தல்லவா இருக்கிறது. எலி தின்று பசி போக்கிக் கொள்ளுங்கள் என்று 'உபதேசம்' செய்கிற நிலைமையல்லவா காண்கின்றோம்.

இது மக்களின் கசப்புணர்ச்சியை, கொதிப்புணர்ச்சியை அதிகமாக்கித்தானே இருக்கும்?

இருந்தும், இம்முறை எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் அளவுக்குத் துணிவு எப்படி வந்தது துரைத்தனம் நடத்தும் கட்சியினருக்கு?

தம்பி! நாம் மட்டும் அல்ல, உண்மையான ஜனநாயகவாதிகள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி. ஒரு கட்சியை மக்கள் வெறுத்து ஒதுக்குவதற்கு என்னென்ன கொடுமைகளை அந்தக் கட்சி நடத்திடும் ஆட்சி செய்திட வேண்டுமோ அவ்வளவும செய்தான பிறகு, அந்தக் கட்சித் தலைவர், எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் துணிவு, எதைக் கொண்டு பெற முடிகிறது?

பணம், தம்பி! பணம்! மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைத்துள்ள பணம்!

பணம் பாதாளம்வரை பாயும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

வாய்க் கசப்பைப் போக்க, நாக்கிலே தேன் தடவுவதுபோல, கசப்புணர்ச்சி கொண்டுள்ள மக்களுக்கு, பணத்தாசை காட்டி, மயக்கிடலாம் என்ற நம்பிக்கை.

ஏழ்மையும் அறியாமையும் கப்பிக் கொண்டிருக்கும் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களை மீண்டும் வலைவீசிப் பிடித்துவிடலாம் என்ற நைப்பாசை.

இதனை மறுத்திட நினைத்திடும் மகானுபாவர்கள், 1962-ம் ஆண்டிலே இருந்த கசப்புணர்ச்சிபோய்விட, இந்த ஐந்து ஆண்டுகளிலே காங்கிரசாட்சி எடுத்துக் கொண்ட முயற்சிகளிலே எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்கிடக் கேட்டதுண்டா?

விளக்கமாவது அவர்களாவது தருவதாவது! ஒரே வீராவேசம் அல்லவா பொங்கி வழிகிறது! பெரியவரே, மரண அடி கொடுப்பேன் என்ற தரமான பேச்சுப் பேசும்போது 'பொறியர்கள்' பேசுவது எந்தத் தரம் இருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்?

ஏடா! மூடா! எமக்கு இதுபோது வந்திருக்கும் புதிய வலிவுக்கான காரணம் புரியாது கிடக்கின்றனையே! கூறுதும் கேண்மின்! இது காமராஜர் சகாப்தம்! அறிந்திடுமின்! அவர் புகழ் அவனியெலாம் பரவியுள்ள காலம்! பொருள் புரிந்துகொள்ள முனைமின்!— என்ற முறையில் நாடமிடுவது தெரியும், தம்பி! நன்றாகத் தெரியும்.

காமராஜப் பெரியவரின் புகழ் இந்தக் காசினி எங்கும் பரவியுள்ள கதை சுவையுள்ளது.

ஆனால் அந்தப் புகழ் காங்கிரசுக்குப் புது வலிவும் பொலிவும் தேடிக்கொடுத்து, மக்களின் கசப்புணர்ச்சியை மாற்றிவிடும் அளவினது, அல்லது வகையினது என்றால்,

தம்பி! 1962-ம் ஆண்டுத் தேர்தலின் போது 'முடிசூடா மன்னராக' — 'ஆசியாவின் ஜோதியாக' — மகாத்மாவின் வாரிசாக — இருந்துவந்தாரே பண்டித ஜவஹர்லால் நேரு, அவருக்கு புகழ் ஏதும் இல்லையோ!!

அந்தப் புகழ் இருந்தும்தானே, எதிர்க் கட்சிகள் வளர்வதைக் காங்கிரசினால் தடுத்திட முடியாமற் போய்விட்டது?

இன்று இருப்பதைக் காட்டிலும் சிறிதளவு குறைவாகவே அல்லலும் அவதியும் மக்களை வாட்டிக்கொண்டிருந்தபோதே 'நேருவின் புகழொளியில் மயங்கி, மக்கள் எதிர்க்கட்சிகளை ஆதரிக்க முடியாது என்று கூறிவிடவில்லை.

நேருவின் 'புகழொளி'க்கு இருந்ததைக் காட்டிலும் வசீகரமும் வல்லமையும் காமராஜர் புகழொளிக்கு உண்டு என்று கூறுவார் உண்டா?

நேருவினால் அவர் நாட்களில் சாதிக்க முடியாது போனவைகளைக் காமராஜர் இன்று சாதிக்கப்போகிறார் என்று கூறுவார் உண்டா?

நேருவைக்காட்டிலும் காமராஜர், உலகமறிந்தவர்; நேருவிடம் உலகம் காட்டிய மதிப்பைவிட அதிக அளவு மதிப்பினைக் காமராஜரிடம் காட்டுகிறது; நேருவின் அறிவாற்றலைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அளவு கொண்டவர் காமராஜர்; பிரச்சினைகளை விளக்குவதில், வாதத்திறமையில், சிக்கல்களை நீக்குவதில், நேருவுக்கும் இல்லாத திறமை இவருக்கு உண்டு என்பார் உண்டா?

மக்களைத் தன்வயப்படுத்திடும் ஓர் புன்னகை, கோபத்தையும் கொதிப்பையும் கூட ஓரளவு மறந்திடச் செய்திடும் நடை அழகு, உலகப் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டும் தனித்தன்மை, உலகின்பல்வேறுநாட்டுத் தலைவர்களுடன் மட்டுமல்லாமல், கவிஞர்கள், தத்துவ மேதைகள், காவிய கர்த்தாக்கள், விஞ்ஞான வித்தகர்கள், பொருளாதாரநிபுணர்கள், புரட்சி பூத்திடச் செய்த மாவீரர்கள் ஆகியோருடன் நேசத் தொடர்பு கொண்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விசாலமான நோக்கம், தாராளத் தன்மையுடைய சிந்தனை, இதயங்களை ஈர்த்திடத்தக்க

மேரு புகழ்கொண்ட நேருவால்கூட....

இலட்சிய ஆர்வம் இவ்வளவும் கொண்டல்லவா விளங்கி வந்தார் பண்டிதர்.

அவர் புகழ் பாடாத ஏடுண்டா? பரவாத நாடுண்டா? படம் இல்லாத வீடு உண்டா?

எத்தனை எத்தனை கோலத்தில் அவர் படம்; நித்தநித்தம்; இதழ்கள்மூலம்.

சிந்திக்கும் நேரு, சிரித்திடும் நேரு, சீறிடும் நேரு, குழந்தைகளுடன் கொஞ்சிடும் நேரு, விளக்கிடும் நேரு, வினவிடும் நேரு, மாபெருங் கூட்டம் கண்டு நெஞ்சு நெகிழ்ந்திடும் நேரு, ஊர்வலத்தில் முகம் மலர்ந்திடும் நேரு, விமான நிலையத்தில் நேரு, விஞ்ஞானக் கூடத்தில் நேரு, குதிரைமீது நேரு, குதூகல நடனமிடும் நேரு, ஜொலிக்கும் நட்சத்திரங்களுடன் நேரு, உழைக்கும் பாட்டாளிகள் மத்தியில் நேரு, பத்திரிகை நிருபர்களிடம் நேரு, வணிகர் விழாவில் நேரு, பக்ரா பக்கத்தில் நேரு, குலு பள்ளத்தாக்கில் நேரு, நாகநாடு உடையில் நேரு, பர்மிய கோலத்தில் நேரு, ஆங்கில உடையில் நேரு, கேக்வெட்டும் நேரு, பாக்—அதிபருடன் நேரு, சோ-இன்-லாயுடன் நேரு, கெனியாடாவுடன் நேரு, நைல் நதி தீரத்தில் நேரு, ரோவல்கா கரையில் நேரு, ஐ. நா. சபையில் நேரு, ஆல்ப்ஸ் குன்றில் நேரு, வெசுவயஸ் எரிமலை காணும் நேரு, லால்பகதூர் தோளைத் தடவிக் கொடுத்திடும் நேரு. தம்பி! ஒன்று இரண்டா, ஓராயிரம் மட்டுமா? ஓராண்டா ஈராண்டா? முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அல்லவா, அவர் திருஉருவம் கண்டு, நாட்டு மக்கள் சொக்கினர்!

இருந்தும்? அவர் நடாத்திய ஆட்சி, மக்களுக்கு நல்வாழ்வு தரவில்லை என்று மனதார நம்பின எதிர்க்கட்சிகள் அந்தப் புகழொளி கண்டு மயங்கி, முடங்கிக்கிடந்தனவா? இல்லையே!

அந்தப் புகழொளி எதிர்க்கட்சிகளை இருக்கும் இடம் தெரியாமலா செய்துவிட்டது? இல்லையே!

அவருடைய புகழ்ஒளிபோதும் தனி மராட்டிய மாநிலம் வேண்டாம் என்று கூறிவிட்டனர்? இல்லையே!

அந்தப் புகழொளி இருக்கும் போது நாம் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை-இந்தி வந்தால் வரட்டும் என்று இருந்துவிட்டனர்? இல்லையே!

குறைகளைக் கூறிட, கருத்து வேற்றுமைகளை எடுத்துரைத்திட, கிளர்ச்சி நடத்திட, கருப்புக்கொடி காட்டிட முடிந்தது எதிர்க்கட்சிகளால்—புகழொளி இருந்தும்.

நேருவின் புகழொளிக்கு இல்லாத வசீகரமும் வல்லமையும், காமராஜரின் புகழொளிக்கு இருக்கிறது என்று கூறிடக் கூசுவர் எவரும்; கூறிடத் துணிவோர், நேருவின் நினைவுக்கே கறை பூசிடும் காதகராவர்.

நேருவின் புகழொளியையே இவ்வளவு விரைவிலே மறந்து, வேறோர் புகழொளி அவருடையதைவிட வலிவுள்ளது என்று பேசிடத் துணிவோர், இந்தப் புதிய புகழொளியை எத்தனை சடுதியில் மறந்திடத் துணிவர் என்பதை எண்ணும்போது, தம்பி! எவருக்கும் நடுக்கம் எடுக்கும்.

என்றாலும், கூசாமல் கூறுகின்றனர், காமராஜரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலிவைக் கொடுத்து விட்டது; எதிர்க்கட்சிகளுக்கு இனி எதிர்காலம் இல்லை; கசப்புணர்ச்சி கொண்டிருந்த மக்கள் இப்போது களிநடமிடுகின்றனர் என்றெல்லாம்.

அதுபோலக் கூறுபவர்களின், 'போற்றி! போற்றியை'ப் பொருள் உள்ளது என்று எண்ணிக் கொண்டு காமராஜப் பெரியவர் 'மரண அடி கொடுப்பேன்'—என்று முழக்கமிடுகிறார்.

தி. மு. கழகம் 34 இலட்சம் வாக்குகளைப் பெற்ற போது 'ஆசியஜோதி' ஒளிவீசிக்கொண்டிருந்திடக் கண்டோம்.

அந்தப் புகழொளி கண்டு மயங்கிடாத கழகம், மாய்ந்திடாத கழகம், காமராஜரின் 'புகழொளி'யைக் கண்டா, மிரண்டிடும்!

'புகழொளி'—தனி மனிதர்களின் அறிவாற்றலைக் கொண்டு அமைகிறது!

ஏழையின் இதயத்துக்கு நிம்மதியும், இல்லத்துக்கு நல்வாழ்வும், இதழுக்குப் புன்னகையும் தரத்தக்க ஆட்சிக்காகப் போரிடுபவர்கள், 'புகழொளி' போதும் என்று இருந்துவிடமாட்டார்கள்.

அத்தனைப் புகழொளியும் எமது பசியைப் போக்கிட வில்லையே; குமுறிக்கிடக்கின்றோம்; வாழ்வு நிமிர்ந்திட வழி காணோமே; என்ற ஏக்கக் குரலே எழுப்புவர்.

எதிர்க்கட்சிகள், ஏமாற்றமடைந்த, எரிச்சல் கொண்ட, ஏக்கப் பெருமூச்சு எழுப்பும் மக்களின் படைப்புகள். எங்கிருந்தோ வந்து குதித்திடுபவைகள் அல்ல!

புகழொளிகளைப் புதிது புதிதாக உண்டாக்கிக் காட்டுவதால், எதிர்க்கட்சிகள் மடிந்திடா; மக்களின் முகத்தில் படிந்துள்ள கவலைக்கோடுகள் துடைக்கப்பட்டு, வறுமை தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆற்றப்பட்டு கண்ணீர் துடைக்கப்பட்டாலொழிய, எத்தனை பெரிய எக்காளம் கிளப்பி, மரண அடி கொடுப்பேன் என்று உரத்தக் குரல் எழுப்பினலும்விம்மும் மக்கள் கட்டிக் காத்துவரும் எதிர்க்கட்சியினை ஒழித்திடுவது முடியாத காரியம்.

இதனைக்காமராஜர் அறியாமல் இருக்கமுடியுமா? அறிவார்! ஆனல் அவரை நம்பிக்கொண்டு, ஆனல் கழக வளர்ச்சி கண்டு நடுங்கிக்கொண்டுள்ள 'கனதனவான்களு'க்குத் தெம்புதர, தைரியம் ஊட்ட மரண அடி கொடுக்கிறேன்!—என்று பேசுகிருர், பேசட்டும்.

அண்ணன்,



2-ம் பக்கத் தொடர்ச்சி

கும் கலகம் செய்தால்தான் வழி பிறக்கும் என்ற எண்ணம் ஏற்பட வழிகோலிவிடும்! இல்லையா?

பி:- மனமார நான் அப்படிச் செய்யவில்லை. இந்த எதிர்க்கட்சிக்காரர்கள், அவ்வளவு அடாவடியாக நடந்துகொண்டார்கள்.

வி:- எதற்கெடுத்தாலும் எதிர்க்கட்சிகளையே குறை சொல்லும் வழக்கத்தை நீங்களாவது நிறுத்திக் கொள்ளுங்கள்! எதிர்க் கட்சிகள் எதற்காக இருக்கின்றன? ஆளுங்கட்சியாக இருக்கும் உங்களது குற்றங்குறைகளை எடுத்துச் சொல்கின்றன; கூறப்படும் குற்றங்குறைகளைப் பொறுத்துக்கொண்டு, என்ன சொல்கிருாகள்; அதில் எவ்வளவு உண்மையும் நியாயமும் இருக்கிறது என்பதைக் கண்டறிவதும் கண்டறிந்து செயல்படுவதும் தான் ஆள்வோரின் கடமையாக இருக்கவேண்டும். குறை கூறப்பட்ட குற்றச்சாட்டுகள, மேலும் நிகழாதபடியான நிலைமையை ஏற்படுத்திவிட்டால், குற்றச்சாட்டுக்கள் எப்படிப் பிறக்கமுடியும்? குற்றச்சாட்டுக்கள் எழமுடியாத நிலைமை நாட்டில் ஏற்பட்டால் எதிர்க்கட்சிகள் எப்படி வளர முடியும்? செல்வாக்கோடு இயங்கமுடியும்? அப்படி அச்சமும், தயக்கமும் உள்ள தன்மையில் ஆளும்கட்சி, மக்களைச் சந்திக்க வரலாமே! கோடி கோடியாக நிதி திரட்டிக்கொண்டிருக்கத் தேவை இல்லையே?

பி:- என் தந்தையாரின் காலத்திலும், சாஸ்திரியாரின் காலத்திலும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள்போட்டு, நாட்டின் நல்வாழ்வுக்கு வழிகோலவில்லையா? இதில்கூட குற்றங்குறை கூறுகிருர்களே!

வி:- குறைகூருமல் என்ன செய்வார்கள்? திட்டங்களை வகுக்கும்போதே, நாட்டின் நிலைமையையும் தன்மையையும் மனத்தில் கொண்டு, முதல் தேவை, அடுத்த தேவை எனக் கண்டறிந்து, அதற்குத் தக்கபடிச் செயல்பட்டிருக்க வேண்டும் எதையோமனதில் நினைத்துக்கொண்டு, எப்படியோ திட்டங்களைத் தீட்டிவிட்டால் போதுமா? திட்டங்களைச் செயல்படுத்தும் விதத்தில்கூட ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது.

பி:- ஊழல்களையும் லஞ்சத்தையும் ஒழிக்கவே நந்தாவை நியமித்து இருக்கிருர்கள் என் முன்னேடிகள்!

வி:- ஊழல் புகார்கள் வந்திருக்கிறதே! ஊழல் அகலுமா? மறையுமா?

பி:- யாருமே என்னேடு சரியாக ஒத்துழைப்பதில்லை! நான் எப்படி உறுதியாக ஒன்றில் செயல்பட முடியும்?

வி;- நாட்டின் மறுமலர்ச்சிக் கொள்கைக்கு உங்களுடன் ஒத்துழைப்புக் கொடுக்காதவர்களை, அமைச்சர் அவையில் எதற்காக வைத்துக்கொண்டிருக்க வேண்டும?

பி;- அப்படி ஒரு சந்தர்ப்பம் வராமலா போகப் போகிறது! பார்த்துக்கொள்கிறேன்.

வி:- நான்காவது நகல் திட்டம் போட்டீர்களே, அது உங்கள் ஆசைப்படிதானே அமைந்திருக்கிறது?

பி:- ஆமாம்! நாடு விரைவில் சுபிட்சம் பெறவேண்டும் என்று பேராசைப் படுகிறேன் நான்!

வி:- நீங்கள் ஆசைப்படுகிறீர்களோ, பேராசைப்படுகிறீர்களோ, நாடு என்ன ஆசைப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டாமா? அதோ பாருங்கள்! அடுக்கடுக்காக உள்ள அத்தனை ஏடுகளையும்! உங்கள் 4ம் திட்டத்தைக் கண்டிக்காத ஒரு இதழ் உண்டா இந்த நாட்டில்! விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டாமா? 23,750 கோடி என்ருல், அடேயப்பா ... பிரமிப்பாக இருக்கிறதே? எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள்? எவ்வளவு புதிய வரிகள் போட இருக்கிறீர்கள்?

பி:- வெளியார் கடனை நம்பித்தான் திட்டம் போட்டிருக்கிறோம்; கொஞ்சம் வரி, சுமார் 3000 - கோடிக்கு!

வி:- 3000 கோடிக்குப் புது வரியா! நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் வரி உயர்வு எவ்வளவு சதவீதம் என்று கூறமுடியுமா உங்களால்?

பி:- குறிப்பேடு கொண்டு வரவில்லை. அதனல்—

வி:- எதற்காக இழுக்கிறீர்கள்! கூறிவிட்டால் தேர்தல சமயத்தில் கொஞ்சம் கஷ்டப்பட நேரிட்டுவிடும்! யாராவது இப்படி பார்லிமெண்டில் கேள்வி கேட்டால்கூட, நாட்டின் நலனை உத்தேசித்து பதில் சொல்ல முடியாது என்று கூறிவிடுங்கள்!

சிறுகதைப் போட்டி

சிறந்த மூன்று கதைகளுக்கு
ரூ. 500 அன்பளிப்பு
கதை அனுப்பக் கடைசித் தேதி
31-10-66

தமிழ் நாட்டில் இளம் எழுத்தாளர் துறை முன்னேற, புத்தம் புதிய எழுத்தாளர்களைப்பொது மக்களுக்கு அறிமுகப்படுத்த 'சிறுகதைப் போட்டியொன்று' தொடக்கப்பெறும். தேர்ந்து எடுக்கப்பட்ட கதைகள் தனிப் புத்தக வடிவில் வெளிவரும். ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களே! எங்கே உங்கள் கதைகள்? கதை எழுதும் விவரங்கள் அறிய 5 காசு அஞ்சல் வில்லைகள் ஐந்துடன் விண்ணப்பிக்கவும்.

கலைச்செல்வி பதிப்பகம்,
திருவாரூர் அஞ்சல்.

பி:- (சிரிப்பு!)

வி:- நீங்கள் சிரிக்கிறீர்கள்! நாட்டின் நிலைமையில் உங்களால் சிரிக்கவும் முடிகிறது!

பி:- சிரித்தால் நல்லபடி ஜீரணமாகுமே!

வி:- ஆமாமாம்! நல்லபடி ஜீரணமாகிவிடும்! ஒன்று செய்யுங்களேன்! நாட்டில் யாரும் சிரிக்கக்கூடாது என்று ஒரு சட்டம் செய்துவிடுங்கள் அப்புறம் ஜீரணமாகாததன்மையால் உணவுப் பண்டத்தின் தேவை கொஞ்சங் குறைந்து. பற்றாக்குறையிலும் கொஞ்சம் நிறைவு ஏற்படும்!

பி:- (சிரிப்பு)

வி:- விளையாட்டுக்குச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். உங்களது மூன்று திட்டங்களுக்குப் பிறகும் வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதியை எதிர்பார்த்துக்கொண்டு கடற்கரையிலே காத்து நிற்கிறீர்கள். இது விவசாய நாடல்லவா—விவசாயத் திட்டத்தை நிறைவேற்றி, 'போதுமான' உணவு உற்பத்தக்கு அல்லவா முதலிடம் கொடுத்திருக்க வேண்டும்? உங்களையும், உங்கள் செயல்களையும் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது; பிரிட்டிஷ் வைஸ்ராய் வாரன்ஹேஸ்டிங் பற்றிய நினைவு வருகிறது; அவன்மீது குற்றஞ் சாட்டி வழக்கு மன்றத்தில் நிறுத்தியதுபோல உங்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டால் நீங்கள் ஓடவேண்டிய இடம் எங்கே என்று தேடவேண்டி இருக்கும்!

பி:- மூன்று திட்டங்களையும் மக்கள் ஏற்றுக் கொண்டதால்தானே மூன்று முறையும் காங்கிரசைப் பதவியில் அமர்த்தி இருக்கிறார்கள்; தவறுகள் நேர்ந்திருந்தால் அதற்கு மக்களும் பொறுப்புதானே?

வி:- இப்படிச் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும்! ஜனநாயகத்தில் உங்கள் பங்கு என்ன? கடமை என்ன? என்பதை நீங்கள் உணரும் காலம் வந்துவிட்டது. உங்களை இன்னமும் நம்புகிறதே இந்த நாடு, அதை எண்ணிப் பரிதாபப்படுகிறேன!

பி:- திட்டங்கள் மூலம் வளமே இல்லை என்கிறீர்களா?

வி:- அப்படியா சொன்னேன்! உங்கள் தலைநகரமே எவ்வளவு வளமை பெற்றிருக்கிறது; அங்கே யமுனை நதியட்டுமா ஓடிக்கொண்டிருக்கிறது? சாராயமும், சீமைச் சரக்குகளும்கூட அல்லவா ஓடிக்கொண்டிருக்கின்றன; வெளிநாட்டிலிருந்து யாராவது வந்தால், என்ன எண்ணிக்கொள்வார்கள்? நாம டில்லிக்குத்தான் வந்திருக்கிறோமா? அல்லது லண்டன், பாரிஸ் போன்ற பட்டணத்திற்கா? என்று நினைக்குமளவுக்கு வளமை!

பி:- இதற்குக்கூட நான் என்ன செய்ய முடியும்? மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்தத்தான் ஏற்பாடுகள் நடக்கின்றன.

வி:- தெரிகிறதே. இது பற்றிய பிரச்னையை தேர்தலுக்குப் பின் ஆராய்வோம் என்று சொல்லும் போதே, உங்கள் திட்டம் புரியவில்லையா? நான் வெளிப்படையாகவே சொல்கிறேன்; உங்கள் அப்பாவைப்போல, உங்களுக்கு முன் கோபம் வரும் என்றாலும், சட்டென்று கோபத்தை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில். உங்கள் அட்டர்னி ஜெனரல் கூறியதைப்போல, நீங்கள் எதனையும் ஓட்டுச் சீட்டை மனதில் நினைத்தே செயலாற்றுகிறீர்கள். அதனால்தான் நாட்டு நிலைமையையும் தேவைகளையும் உள்ளது உள்ளபடி புரிந்துகொள்ள முடிவதில்லை!

வி:- அது சரி, தேர்தல் பிரசாரத்திற்குத் தமிழ் நாட்டுப் பக்கம் போவீர்களா?

பி:- சட்டாயம் போவேன்!

வி:- காமராசர் அழைக்காவிட்டால்?

பி:- பக்தவத்சலம் இருக்கிறார்!

வி:- இருவருக்கும்...

பி:- எதுவாகவேனும் இருக்கட்டும்; தமிழ் நாட்டு மக்களிடம் சென்று நான் வாக்குக் கேட்டே தீருவேன்!

வி:- காமராசர் வருவாரா?

பி:- வந்தால் என்ன வராவிட்டால் என்ன? நான் மாஸ்கோ சென்றபோதும் தமிழ்நாடு போனபோதும் வழியனுப்ப வந்தாரா என்ன? அவர் ரஷ்யா போனபோது நான்கூட வழியனுப்பப் போகவில்லையே! என்னைப் பிரதமராக ஆக்கினார்! அதற்காக அவர் இஷ்டப்படியெல்லாம் ஆட முடியுமா? செல்லுமிடமெல்லாம்தான் போக முடியுமா?

வி:- சரி! சரி! ஏதோ! சரிக்கட்டிக் கொண்டு காரியமாற்றுங்கள்! வாகிற எதிர்காலம் உங்களுக்கெல்லாம் பயங்கரமானது. தேர்தல் காலமென்பதற்காகச் சில வாக்குறுதிகளை வழங்குவீர்கள்! வழங்குவதுவும் கொஞ்சம் வகையோடு இருக்கட்டும்.

பி:- அப்படியே! நான் புறப்படுகிறேன். ஒரு விருந்துக்குப் போக வேண்டும்!

வி:- விருந்தா! பேஷ்! பேஷ்!! சீக்கிரம் புறப்படுங்கள்! விருந்து வீணானால், அது கூட வரிப்பணத்தில்தான் நஷ்டக் கணக்கு காட்டுவீர்கள்! புறப்படுங்கள்! புறப்படுங்கள்!!

பி:- நமஸ்தே!

வி:- நமஸ்தே!!

[பிரதமர் புறப்பட்டுச் செல்கிறார்! வினோபா பிரார்த்தனையில் உட்காருகிறார்.]

—சீயேயெம்.

○

இல்லை என்பது இல்லை

முதலாளி உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்; கோபம் மேலிட்டது; கடையில் அலுவல் பார்ப்பவன், ஒரு சீமாட்டியிடம் "இல்லை!" என்று சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்ததால்.

"இல்லையா! ஏன் இல்லை! இதோ ஒரு நொடியில், கிடங்கிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து தருகிறேன்" என்று முதலாளி உரத்துக் கூவினான். சீமாட்டி சிரித்துக்கொண்டே வெளியே போய்விட்டாள்,

முதலாளி, பணியாளை அழைத்து "யார் எந்தச்சாமான் கேட்டாலும், அது நமது கடையில் இல்லை என்றாலும், 'இல்லை' என்று சொல்லக்கூடாது; தருகிறேன் என்று சொலலிவிட்டு வெளியில் இருந்தாவது தருவித்துத் தரவேண்டும் என்று உனக்குச் சொன்னேன், பலதடவை. இப்போது இல்லை என்று சொன்னாயே சீமாட்டியிடம்! சொல்லலாமா? என்ன கேட்டார்கள் சீமாட்டி?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

பணியாள் அமைதியாக "ஒரு வாரமாக மழை இல்லையே?" என்று சொன்னார்கள்; "ஆமாம்! இல்லை!" என்று நான் சொன்னேன்; வேறொன்றுமில்லை என்றான்.

சென்னை காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, [illegible] பி. என். ஏ. [illegible]
[illegible] வெளியிடப்பெற்றது. [illegible]